සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / *All rights Reserved*

මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය

## மத்துகம கல்வி வலயம்

# இரண்டாம் தவணை பரீட்சை – 2023

| | | | |
|---|---|---|---|
| தரம் :- 11 | பாடம் :- வரலாறு | வினாப்பத்திரம் I | நேரம் :- 01 மணித்தியாலம் |

பெயர் :- ..........................................................................................

**மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. இராசரட்டை நாகரிகம் பற்றிய தகவல்களை அறிந்துக்கொள்ள உதவுகின்ற நூல் பின்வருவனவற்றுள் எது?
   1. சந்தர்மலங்கார 2. பெரகும்பா சிரித்த 3. திசர சந்தேசய 4. கவிசிலுமினு

2. இந்நாட்டில் கிடைக்கப்பெற்ற மிகவும் பழமையான நாணயம் எது?
   1. கஹபண நாணயம் 2. யானை மற்றும் சுவஸ்திகா பதித்த நாணயம்
   3. லக்ஷ்மி நாணயம் 4. தம்பமஸ்ஸ நாணயம்

3. பின்வருவனவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட கால தகவல்கள் கிடைக்கப் பெற்ற இடமாக கருதப்படுவது.
   1. பூந்தல வெல்லே கங்கொட 2. பத்திராஜவெல 3. உடவளவை 4. மினிஹாகல்கந்த

4. வேவெல் கெடிய கல்வெட்டு உருவாக்கப்பட்டது நோக்கம் யாது?
   1. விகாரை ஆராமைகள் நிர்வகித்தல் தொடர்பானது.
   2. நபர் ஒருவரின் சேவையை பாராட்டுவது தொடர்பானது.
   3. குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது தொடர்பானது.
   4. அரசுக்கு செலுத்த வேண்டிய வரி தொடர்பானது.

5. பின்வருவனவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஈரவலய வெட்டவெளி பாசறைகளில் ஒன்றாக கருதப்படுவது
   1. மினிஹாகல்கந்த 2. பெல்லன் பதிப்பலஸ்ஸ 3. பதிராஜவெல 4. பட்டதொம்பலன

6. கீழ் தரப்பட்டுள்ள தகவல்களுள் வரலாற்றுக்கு முற்பட்ட கால சடங்கு சம்பிரதாய முறைப் பற்றி கூறும் விடையினை மட்டும் தெரிவு செய்க.
   1. பரணி மயானம் பயன்படுத்தப்பட்டமை.
   2. களிமண் ஓட கல்லறை மயானம் பயன்படுத்தப்பட்டமை.
   3. செந்நிற கற்களை உராய்ந்து பூசப்பட்ட எலும்புக்கூட்டின் பகுதி.
   4. அஸ்தி வைக்கப்பட்டு கல்லறை மயானப் பயன்பாடு.

7. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் எழுதப்பட்ட பிராமி கல்வெட்டுகளில் **'புரகமத்த'** எனும் சொல் எதனை குறிப்பதாக அமைகின்றது
   1. பாதுகாக்கப்படாத கிராமங்களை குறிப்பதற்கு.
   2. நகரத்தின் பிரதான கட்டட கலைஞரை குறிப்பதற்கு.
   3. 10 கிராம தலைவர்களின் சங்கத்தை குறிப்பதற்கு.
   4. குடும்பத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குர்ஹபதியை குறிப்பதற்கு.

8. **'கிராமத்து இல்லத் தலைவர்களில் இருந்து தெரிவு செய்பவரே கமிக'** என புத்தகோச தேரர் எந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்
   1. சந்தர்மலங்கார 2. நிகாய சங்கிராய 3. சம்பந்தபாதசிகா 4. பூஜாவலிய

9. **தொட்டப் போஜக** என்ற பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?
   1. இல்லத் தலைவன் 2. கிராமத் தலைவர் 3. மதுபாச்சிகா 4. பருமக

10. முதன் முதலில் நிர்வாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, அந்த ஒவ்வொரு நிர்வாக மாவட்டங்களையும் நிர்வகிப்பதற்கு அமைச்சர்களை நியமித்த அரசன் யார்?
   1. வசபன் 2. பண்டுகாபயன் 3. துட்டகைமுனு 4. பாதிகாபயன்

11. **போசனி அரசன்** என்று அறியப்பட்ட பிராந்திய நிர்வாகி பற்றி கூறும் கல்வெட்டு எது?
   1. தோணிகல கல்வெட்டு 2. கழுதிய பொகுண கல்வெட்டு
   3. எம்புல் அம்பே கல்வெட்டு 4. பதுளை தூண் கல்வெட்டு

12. பண்டைய காலத்தில் எமது அரசர்கள் வெளிநாடுகளோடு தொடர்புகளை மேற்கொண்டனர் என்பதை சான்று படுத்தும் விடை தொகுதியை தெரிவு செய்க.
   1. முதலாம் கஜபாகு மன்னன் சேர ராஜ்ஜியத்தோடு தொடர்புகளை மேற்கொண்டான்.
   2. முதலாம் விமலதர்ம சூரியன் கலிங்க தேசத்தோடு திருமண தொடர்புகளை மேற்கொண்டான்.
   3. ஆறாம் அக்ரபோதி மன்னன் சீனாவுடன் ராஜதந்திர உறவுகளை மேற்கொண்டான்.
   4. பாதிகாபய மன்னன் உரோம நாட்டுக்கு தூதரக அதிகாரிகளை அனுப்பினான்.

13. தலைமை பிக்குவை அண்டி வாழ்ந்த மாணவ பிக்குகளை அழைப்பதற்காக கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?
   1. அந்தே வாசிக்க 2. சதிகாரிய 3. பாணக 4. வசவசிக

14. முன் வரலாற்றுக் காலத்தில் மட்பாண்டம் தயாரித்தலின் போது பாத்திரத்தின் வெளியே வெள்ளை நிறமும் உள்ளே கறுப்பு நிறமும் காணப்பட்டமைக்கான காரணமாக யாது?
   1. சூலையில் இட்டு சுடப்பட்டமையால்.
   2. மட்பாண்டங்களை சூலையில் தலைகீழாக கவிழ்த்து சுடப்பட்டமையினால்.
   3. பாத்திரத்தில் உமியை நிரப்பி சூலையினுள் கவிழ்த்து சுடப்பட்டமையினால்.
   4. மட்பாத்திரத்தின் உள்ளே ஒட்சிசன் வாயு உட்புகாதவாறு அடைத்து வைத்ததனால்.

15. சிகிரியா குன்று பாதையின் இரு மருங்கிலும் நான்கு நீர் பூங்காக்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
   1. நீரை சேமித்து வைப்பதற்கு
   2. மேலெழும் நீரின் உயரத்தின் அளவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு
   3. மேலெழும் நீரின் உயரத்தை குறைப்பதற்கு
   4. மழைக்காலத்தில் படியும் சேற்றை நீக்குவதற்கு

16. பண்டைய காலத்தில் அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காக செலுத்தப்பட்ட வரி பின்வருவனவற்றுள் எது?
   1. மதரமஞ்சக்க 2. தக்கபதி 3. புகய 4. போஜக்கபதி

17. தனது கணவன் தூர நாடொன்றிற்கு வர்த்தகத்தின் பொருட்டு சென்று மூன்று ஆண்டுகளின் பின்னர் திரும்பி வரும் வரை தனியாக வாழ்ந்த பெண் ஒருவர் பற்றி கூறும் நூல் எது?
   1. சந்தர்மலங்கார 2. ரசவாஹினி 3. சந்தர்ம ரத்னாவலி 4. சகஸ்ஸ வத்துப்பகரண

18. பண்டைய கால மக்கள் உட்கொண்ட உணவுகள் **'அ'** நிரலிலும் அதன் பண்டைய பெயர்கள் **'ஆ'** நிழலிலும் தரப்பட்டுள்ளது. அவற்றை இணைப்பதன் மூலம் பெறப்படும் விடை தொகுதியை தெரிவு செய்க.

| | |
|---|---|
| 1. நெய்யில் சமைக்கப்பட்ட மயில் இறைச்சி | A. என்புல் ஹம்பு |
| 2. தானியங்களை வறுத்து அதன் மூலம் செய்யப்பட்ட உணவு | B. செல்வந்தர்களின் உணவு |
| 3. மருத்துவ குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட | C. அபு ஹம்பு காபு கஞ்சி |
| 4. கஞ்சி என்ற சொல்லுக்கு பழைய நூல்களில் பயன்படுத்தப்பட்ட சொல் | D. அத்சுணு |

   1. ABCD 2. ACBD 3. BACD 4. BDAC

19. இரும்பின் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டமை.
   1. கற்காலத்தில் 2. முன் வரலாற்றுக் காலத்தில் 3. வரலாற்றுக் காலத்தில் 4. நவீன காலத்தில்

20. அனுராதபுரம் **நுருபுரம்** என கூறப்பட்டிருப்பது
   1. வல்லிப்புர பொற்சாசனத்தில்  2. வேவெல் கெடிய கல்வெட்டில்
   3. பனாக்கடுவ செப்பு சாசனத்தில்  4. பதுளை தூண்கல்வெட்டில்

21. பின்வருவனவற்றுள் கமிகவின் கடமைகளுள் ஒன்று **அல்லாதது**
   1. குளத்தின் நீரை விநியோகித்தல்  2. கிராம குலத்தை நிர்வகித்தல்
   3. கிராமத்தில் எழுகின்ற சிறிய பிரச்சனைகளை தீர்த்தல்  4. பல குளங்களை நிர்வகித்தல்

22. **'நீர் நிலையங்களில் வாழும் பறவைகளை கொல்லக்கூடாது'** என சட்டம் விதித்த அரசன் யார்?
   1. நிசங்கம் மல்ல மன்னன்  2. நான்காம் மகிந்தன்
   3. மூன்றாம் உதய மன்னன்  4. காசியப்ப மன்னன்

23. முதன் முதலாக ஆசியாவுக்கு வருவதற்கு புதிய கடல் வழி பாதையை கண்டுபிடித்த ஐரோப்பிய நாட்டவர் யார்?
   1. பார்த்தலோமிய டயஸ்  2. வஸ் கொடகாமா
   3. கிறிஸ்டோபர் கொலம்பஸ்  4. பேர்டினன்ட் மகலன்

24. கி.பி 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது கோட்டை இராச்சியத்தின் அரசனாக விளங்கியவன் யார்?
   1. எட்டாம் வீர பராக்கிரமபாகு  2. ஏழாம் புவனேகபாகு
   3. ஆறாம் புவனேகபாகு  4. ஆறாம் பராக்கிரமபாகு

**25 - 28 முறையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழ்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

A. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ்  B. டெம்ளர்  C. சாமுவேல் மோஸ்  D. ஹென்றி கோட்
E. ரோலர் இயந்திரம்  F .தந்தி முறை  G. மோட்டார் வண்டி  H. ஜெனி இயந்திரம்

25. போக்குவரத்து துறையோடு தொடர்புடைய விடையைத் தெரிவு செய்க.
   1. AH  2. BG  3. CE  4. CF

26. தொடர்பாடல் துறையோடு தொடர்புடைய விடையைத் தெரிவு செய்க.
   1. AH  2. BG  3. CH  4. DE

27. இரும்புருக்கு கைத்தொழிலுடன் தொடர்புடைய விடையினைத் தெரிவு செய்க.
   1. AH  2. BG  3. CF  4. DE

28. நெசவு கைத்தொழிலோடு தொடர்புடைய விடையைத் தெரிவு செய்க.
   1. AG  2. GH  4. AC  4. BD

29. பின்வரும் வரலாற்று தகவல்களை ஒழுங்குப் படுத்துவதனூடாக கிடைக்கப்பெறும் சரியான விடையினை தெரிவு செய்க.
   A. பிரித்தானியரால் திருகோணமலை துறைமுகம் கைப்பற்றப்படல்
   B. இலங்கையின் கரையோர பிரதேசங்களை ஆட்சி செய்த ஒல்லாந்த ஆளுநரான பன் ஏங்களிடம் கியூ கடிதம் ஒப்படைக்கப்படல்
   C. கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடல்
   D. இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக மாற்றப்படல்
      1. ABCD  2. BADC  3. BCAD  4. DABC

30. கண்டி இராஜ்ஜியம் பிரித்தானியர் வசமாவதற்கு காரணமாக அமைந்த ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னனின் செயல்பாடுகள் அடங்கிய விடைத் தொகுதியை தெரிவு செய்க.
   A. ஆங்கிலேயரின் தந்திரோபாயங்கள்.
   B. மன்னனுக்கும் பிக்குமார்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படல்.

C. மன்னனுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படல்.

D. ஆங்கிலேயரின் படையெடுப்பின் போது அரசன் பாதுகாப்பு கருதி தப்பியோடியமை.

1. ABC  2. BCA  3. BCD  4. ACD

31. இலங்கையில் தேசிய மறுமலர்ச்சியின் போது ஹென்றி ஒல்கோட்டவர்களின் பங்களிப்பு அளப்பரியது. பின்வருவனவற்றுள் அவரின் செயற்பாடாகளுள் ஒன்றாக **அமையாத** விடையினைத் தெரிவு செய்க.
1. பாடசாலைகளை ஆரம்பிக்க பிரம்ம ஞான சங்கத்தை தோற்றுவித்தார்.
2. பௌத்த பாடசாலைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தார்.
3. நாடு முழுவதும் சென்று பௌத்த மக்களை தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை மேற்கொண்டார்.
4. வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை தினமாக பிரகடணப்படுத்தினார்

32. பின்வரும் A - D வரையுள்ள தகவல்களுள் ஆறுமுக நாவலர் பற்றி கூறும் விடை தொகுதியை தெரிவு செய்க.

A. மத்ரஸா பாடசாலைகளை ஆரம்பித்தமை.

B. பெரியபுராணம் கந்தபுராணம் ஆகிய நூல்களை மொழிப்பெயர்த்தமை.

C. யாழ்ப்பாணத்தில் சைவ பிரகாச வித்யாசாலையை அமைத்தமை.

D. சிங்கள பராபரம் எனும் நாடக நூலை எழுதியமை.

1. ABC  2. BCD  3. ACD  4. ABD

33. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்ட அரசியல் சீர்திருத்தம் எது?
1. மனிங் சீர்த்திருத்தம்  2. டொனமூர் சீர்த்திருத்தம்
3. கோல்புறுக் சீர்த்திருத்தம்  4. குறுமக்களம் சீர்த்திருத்தம்

34. இலங்கை சமசமாஜ கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1. கி.பி - 1942  2. கி.பி - 1951  3. கி.பி - 1946  4. கி.பி - 1935

35. கி.பி 1912 ஆம் ஆண்டு முதலாவது தேர்தலின் போது கல்வி கற்ற இலங்கையரின் பிரதிநிதியாக சட்டவாக்க கழகத்திற்கு தெரிவானவர்.
1. டி எஸ் . சேனாநாயக்க  2. பொன்னம்பலம் இராமநாதன்
3. பொன்னம்பலம் அருணாச்சலம்  4. டி . பி ஜயதிலக்க

36. அரசியலதிகாரத்தை இலங்கையர் வசப்படுத்திக் கொள்வதற்காக பலமிக்க போராட்டங்களை நடத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு எது?
1. பொப்பி மல் இயக்கம்  2. சூரிய மல் இயக்கம்
3. தேசிய சங்கம்  4. மது ஒழிப்பு இயக்கம்

37. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி காரணமாக ஏற்பட்ட நன்மைகளுள் ஒன்றாக அமைவது
1. காணி உரிமை அற்ற மக்கள் கூட்டம் உருவானவை.
2. மதுபானசாலைகள் நாடெங்கிலும் உருவாக்கப்பட்டமை.
3. கம்சபா எனும் கிராம சபைகள் இல்லாதொழிந்தமை.
4. ஆங்கில கல்வி பரவலாக்கப்பட்டமை.

38. டெனமூர் அரசுக்கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை யாது?
1. 61  2. 37  3. 21  4. 19

39. இலங்கையில் ஈரவைக் கொண்ட பாராளுமன்ற முறை காணப்பட்ட அரசியல் யாப்பு எது?
1. டெனமூர்  2. மனிங் யாப்பு  3. சோல்பரி  4. குறுமக்களம்

40. பரமதம்ம சேதிய பிரிவெனாவை அமைத்த தேரர் யார்?
1. பொதுவில இந்திர ஜோதி தேரர்  2. இரத்மலானை தர்மாலோக தேரர்
3. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்  4. வலானை சித்தார்த்த தேரர்

**( 1 x 40 = 40 புள்ளிகள்)**

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All rights Reserved

மத்துகம கல்வி வலயம்

**இரண்டாம் தவணை பரீட்சை – 2023**

| தரம் :- 11 | பாடம் :- வரலாறு | வினாப்பத்திரம் II | நேரம் :- 03 மணித்தியாலம் |
|---|---|---|---|

**முதலாம் வினா கட்டாயமானது.**
பகுதி II இல் இருந்து **நான்கு வினாக்களையும்** பகுதி III இல் இருந்து **ஒரு வினாவையும்** தெரிவு செய்து எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

**பகுதி - I**

1) அ. 1. பின்வரும் இடங்களை இலங்கை புறவுருவப்படத்தில் குறித்து காட்டுக.
( யான் ஓயா, இரனைமடு குளம் , கலாவாவி, கொழும்பு, பண்டுவஸ்நுவர, ஊர்காவற்துறை, மன்னார் தீவு, லங்காப்பட்டினம், பொலனறுவை, சிலாபம் , இப்பன்கடுவ, செங்கடகல )

**( 1 x 12 = 12புள்ளிகள்)**

2. பின்வரும் இடங்களை உலக புற உருவப்படத்தில் குறைத்துக் காட்டுக.
( கல்கத்தா, மலாக்கா நீரினை, போர்த்துக்கல், ஜாவா தீவு, கொரியா தீபகற்பம் , கொன்ஸ்லாந்து நோபிள் நகரம் )

**( 1 x 6 = 6புள்ளிகள்)**

ஆ. I. A பெரிய மட்பாண்டங்கள் பலவற்றை கிணற்றுக்குள் புதைத்து கிணற்றின் சுவரை மூடியுள்ளனர். இவ்வாறு அமைக்கப்பட்ட கிணறுகளுக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

B. சபுமல் குமாரன் கோட்டை இராச்சியத்திற்கு அரசனாக வந்த காலத்தில் அவனுக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

C. சேர் பொன் அருணாச்சலம் அவர்களால் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட சங்கத்தின் பெயர் யாது?

D. உயர் நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக்கூடாது என கூறிய மன்னன் யார்?

**( 1 x 4 = 4புள்ளிகள்)**

இ. கீழ் வரும் A,B படங்களை அடிப்படையாகக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

A



1. இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பின் பெயர் யாது?
2. இந்நிர்மாணம் காணப்படும் இராசதானி எது?
3. இந்நிர்மாணம் எந்த சமயத்திற்குரியது?
4. இதை நிர்மாணித்தவர்கள் யாவர்?

**( 1 x 4 = 4புள்ளிகள்)**

B



1. படத்தில் காணப்படும் நபரின் பெயர் யாது?
2. இவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் பெயர் யாது?
3. இவர் இலங்கையில் வகித்த உயர்பதவி எது?
4. 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பின் ஊடாக இவருக்கு வழங்கப்பட்ட பதவி எது?

**( 1 x 4 = 4புள்ளிகள்)**

## பகுதி - II

2) 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளி பிரதேசங்கள் மூன்றினை குறிப்பிடுக?

2. ABவரலாற்றுக்கு முற்பட்ட காலம் மனிதனின் குடியிருப்புகளை தெரிவு செய்வதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை குறிப்பிடுக?

3. முன் வரலாற்றுக் கால மனிதனால் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப முறைகள் இரண்டினை விளக்குக?

4. வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலின் செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

3. 1. பண்டுகாபயனால் கட்டப்பட்ட குளங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

2. கீழ் வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.
   A. மட்பாண்டம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணம்.
   B. ருவன்வெளிசாய கோபுரத்தின் உச்சியில் பொருத்தப்பட்ட இடிதாங்கியின் பெயர்.
   C. உலோக கத்தரிக்கோல் கண்டுப்பிடிக்கப்பட்டது.
   D. இரும்பு உலை கண்டுப்பிடிக்கப்பட்ட இடங்களுள் ஒன்று.

( இரும்பு உலை, வஜ்ரசும்பட்ட, பாகியன்கல, சமனல வெவ, ஆலாஹன பிரிவெனா, வனைதல் சில்லு )

3. பண்டைய காலத்தில் பாரிய குளங்களை அமைத்தமைக்கான தேவைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக?

4. பின்வருவனவற்றுள் இரண்டினை அதன் நிர்மாணிப்பு பயன்பாடு என்ற அடிப்படையில் விளக்குக.
   1. அலைத்தாங்கி
   2. கால்வாய்
   3. குளக்கட்டு
   4. கலிங்கல் தொட்டியும் மடைக்கதவும்

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

4) 1. புராதன இலங்கையில் அரசுரிமை கிட்டிய ( மாற்றப்பட்ட ) மூன்று முறைகளை குறிப்பிடுக.

2. பண்டைய கால மக்கள் குளத்தொகுதி (எல்லங்காக) ஒன்றை உருவாக்கி கொண்டதனூடாக அடைந்த நன்மைகள் இரண்டினை குறிப்பிடுக?

3. பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரத்தை ஒருமுகப்படுத்துவதற்காக தேவநம்பிய தீசனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக?

4. நாட்டை ஒருமுகப்படுத்துவதற்காக முதலாம் விஜயபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

5) 1. கண்டி இராசதானிக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் மூன்றினை குறிப்பிடுக?

2. கீழ் ABCD ஒழுங்கில் காணப்படும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

A. கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்து இறுதி சிங்கள அரசன் யார்?

B. கண்ணுசாமி கண்டி அரசனாவதற்கு உதவி செய்த பிரதானி யார்?

C. பிரதானிகளின் கட்டளைகளை, செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர்?

D. டொனா கத்தரினாவின் கணவனின் பெயர் யாது?

( ஜயவீர பண்டார, வீர பராக்கிரம நரேந்திர சிங்கன், வீர சுந்தர பண்டார, யமசிங்க பண்டார, கடுபுள்ளே, பிலிமத்தலாவை, விதானைமார் )

3. இரண்டாம் இராஜசிங்க மன்னன் எதிர்கொண்ட சவால்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

4. முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் எதிர்கொண்ட சவால்கள் மூன்றை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை விளக்குக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

6) 1. 17 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இந்தியாவில்,
A. பிரித்தானியரால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட வர்த்தக நிலையங்கள் இரண்டையும்
B. பிரான்சியரால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட வர்த்தக நிலையம் ஒன்றினையும் குறிப்பிடுக?

2. 1803 ஆம் ஆண்டு கண்டி மீதான ஆங்கிலேயர் படையெடுப்பு தோல்வி அடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிடுக?

3. கி.பி 1818 ஆம் ஆண்டு முதலாம் சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக?

4. கி.பி 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த கோல்புறுக் சீர்த்திருத்தங்கள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

7) 1. பிரித்தானியரின் கீழ் இலங்கையில் கோப்பித்தோட்டங்கள் பரவிய பிரதேசங்கள் மூன்றினை குறிப்பிடுக?

2. கோப்பி செய்கை விருத்தியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிடுக?

3. இலங்கையில் தேயிலை பயிர் செய்து விருத்தியில் பங்களிப்பு செய்த காரணிகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக?

4. பிரித்தானியர் ஆட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட அனுகூலங்கள் மூன்றினையும் பிரதிகூலங்கள் மூன்றினையும் குறிப்பிடுக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

## பகுதி – III

8) 1. மறுமலர்ச்சி காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை விமர்சனத்திற்கு உட்படுத்திய நபர்கள் மூவரை குறிப்பிடுக?

2. A. கிழக்கு நாடுகளுக்கு செல்லக்கூடிய கடல் வழியை கண்டுபிடிக்க ஐரோப்பியர் முன்வந்தமைக்கு செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை குறிப்பிடுக?

B. அதனூடாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகள் இரண்டை குறிப்பிடுக.

3. மறுமலர்ச்சி ஏற்பட ஏதுவான காரணிகள் மூன்றை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

4. மறுமலர்ச்சியின் விளைவாக இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**

9) 1. கைத்தொழில் புரட்சியானது மூன்று துறைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தது. அம்மூன்று துறைகளையும் குறிப்பிடுக?

2. 19ஆம் நூற்றாண்டின் வேறு நாடுகளில் கைத்தொழில் புரட்சி பரவுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிடுக?

3. கைத்தொழில் புரட்சி ஏனைய துறைகளில் ஏற்படுத்திய மாற்றங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக?

4. கைத்தொழில் புரட்சி இலங்கையில் செல்வாக்கு செலுத்திய விதம் பற்றி மூன்று உதாரணங்களின் துணையுடன் விளக்குக?

**( 3 + 4 +5+6= 18 புள்ளிகள்)**


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
T
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න